# யாழ்நாதம்

இதழ் 17

2011




வெளியீடு

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21-02-2010 அன்று நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளின் நிழல்கள்**

(குறிப்பு பக்கம் - 19 தொடக்கம் 30 வரை)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."
"It ought to be beautiful, I live here."

# யாழ் நாதம்

இதழ் 17 2011

உள்ளே: . . . .


| | |
|---|---|
| கல்லூரிக் கீதம் | 02 |
| மலர் ஆசிரியையின் உள்ளத்தில் இருந்து-- | 03 |
| தலைவியின் செய்தி | 04 |
| யாழ் இந்து மகளிர் கல்லூரி நடுத்தோட்ட ராஜவரோதயர் திருவூஞ்சல் | 05 |
| Hinduism - How Pillayar came to be | 08 |
| தாமரை இருந்த தையல் | 12 |
| பாசமிகு பள்ளிக் கூடம் யாழ் இந்து மகளிர் கல்லூரி | 15 |
| சர்வதேச மகளிர் தின நிகழ்வு | 19 |
| 'பார் புகழ் சேவகி' திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் உரை | 22 |
| திருமதி தயாநிதி செல்வநாயகத்தின் உரை | 23 |
| திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கத்தின் உரை | 26 |
| திருமதி திலகா விஜயரத்தினம் அவர்களின் ஏற்புரை | 27 |
| நன்றி சொல்ல வேண்டும் நல்லவர்க்கே - - ஏற்புரை | 28 |
| சான்றிதழ் | 29 |
| வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் (பட்டினம் சிவன் கோயில்) | 31 |
| எம் நாட்டு வைத்தியம். | 33 |
| சிந்தனைக்குச் சில | 37 |
| யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு. பதினேழாம் ஆண்டு அறிக்கை (2010) | 38 |


வெளியீடு:-

'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி - இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் ஆசிரியையின் உள்ளத்தில் இருந்து...

விக்கினங்களை எல்லாம் தீர்க்கும் விக்கினேஸ்வரரான பிள்ளையார் நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையாராக எமது கல்லூரியின் வளாகத்தில் வீற்றிருக்கின்றார். இவ்விதழ் அப்பிள்ளையாருக்கு நடை பெற்ற கும்பாபிஷேக படங்களை முன் அட்டையில் கொண்டும். அப்பிள்ளையாரின் ஊஞ்சல் பாடலை உள்ளடக்கியும் உள்ளது. அத்துடன் பிள்ளையாரின் வரலாற்றினை ஆங்கில கட்டுரையாக கொண்டும் உள்ளது.

கல்விக்கு அதிபதியாம் கலைமகளை போற்றும் கட்டுரையையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் எமது பாடசாலை, எம்மை வழி நடத்திச் சென்ற அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை மறவாது நினைவு கூர்ந்தும் எழுத்துருவில் போற்றியுள்ளோம். சித்தர்கள் கூறுவார்கள். 'அறிவுதான் குரு' என்று. அந்தவகையில் இந்த இதழ் குரு வந்தனமாக வெளி வருகின்றது.

ஏட்டுப் படிப்புடன் நில்லாது எமது ஆன்ம ஈடேற்றத்துக்கு தூண்டு கோலாக உள்ள பல நூல்களையும் படித்தும், சிந்தித்தும் இந்த பரபரப்பான உலகில் இருந்தும், இறுக்கமான மன நிலையில் இருந்தும் விடுபடுவதற்கான வழியைத் தேட வேண்டும்.

அந்த தேடலானது வெளியுலகில் அல்லாது எமது உள்ளத்துள் இருக்க வேண்டும். இவ்வாறான தேடலின் ஊடாக படிப்படியாக மன இறுக்கத்தில் இருந்தும், பரபரப்பான உலக அமைதியின்மையில் இருந்தும் விடுபடமுடியும். குரு என்னும் அறிவின் தேடுதல் ஊடாக ஆன்மாவாகிய நானும் பரமாத்மாவாகிய பரம்பொருளும் வேறு வேறு அல்ல ஒன்றே என்பதை உணர முடியும் என்று சித்தர்கள் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது.

யாழ் நாதம் இதழ்களை அழகுற அமைத்து, ஆண்டுதோறும் வெளியிட உதவிவரும் யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

*61/2, Abdul Gaffoor Mawatha*
*Colombo 3*
*Hot Mail vimalamani@live.com*

*திருமதி விமலா மணிவாசகன்*
*மலர் ஆசிரியை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவியன் செய்தி

யாழ் நாதத்திற்கு இன்று வயது 17. 17 வயதினில் இளமைத்துடிப்புடன் அது வாசகர்களாகிய உங்கள் கையில் தவழ வந்துள்ளது. யாழ் நாதம் சஞ்சிகை எமது கல்லூரியின் பழைய மாணவிகளை வாசிக்கவும், எழுதவும் தூண்டி யுள்ளது. இது ஒரு சாதனை.

இலட்சியத்தோடு கூடிய சகல பெண்களினதும் இலக்கிய வீச்சுக்கு யாழ் நாதம் களம் அமைக்கக் காத்திருக்கின்றது. ஆழமான சிந்தனையைச் செயற்படுத்தி எழுதுங்கள். இந்த சஞ்சிகை, எமது கல்லூரியின் புகழ்பாடும் ஒரு ஆவணம் என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். தேடலுக்குத் தீனி கிடைத்தால் உடனே பேனாவுக்கு வேலை கொடுங்கள். நம் மொழி வளர எழுத வேண்டும். புதிது புதிதாக இளம் எழுத்தாளர்கள் தோன்ற வேண்டும் என்பது எமது அவாவாகும்.

எமது கல்லூரியில் கற்று பல்வேறு துறைகளில் வெற்றியுடன் பிரகாசிப்பவர்களை கொழும்பில் இயங்கும் பழைய மாணவிகள் சங்கம் வருடந்தோறும் இனங்கண்டு கௌரவிக்கிறது. அவர்களது வரலாற்றையும், சாதனையையும் எழுத்துருவில் யாழ் நாதம் பதிவு செய்து வரலாற்று ஆவணமாக்குகிறது. இதற்கு உறுதுணையாக இதழ் ஆசிரியர் விமலா மணிவாசகன் சிறப்புறச் செயலாற்றுகிறார்.

இவ்விதழ் எமது புகழ்பூத்த மாணவிகளான திருமதி திலகா விஜயரத்தினம், திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு ஆகியோருக்கு புகழாரம் சூட்டி கௌரவிக்கின்றது. இதனைக் காணும் எமது பழைய மாணவிகள் எமது கவனத்திற்கு வராத சாதனையாளர்களாக இருக்கும் பழைய மாணவிகள் பற்றி எமக்கு ஆதரபூர்வமான தகவல்களை எழுதி அனுப்ப வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கிறோம். எதிர்வரும் இதழ்களில் அவர்கள் பற்றியும் பிரசுரிக்க வாய்ப்பளியுங்கள்.

இந்த ஆண்டில் எமது பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய செயலாளர் திருமதி கௌரி ரமணா மற்றும் உபதலைவர்கள், பொருளாளர், உபசெயலாளர், ஆட்சிக் குழு உறுப்பினர் மற்றும் நலன் விரும்பிகளுக்கு நன்றி கூறி யாழ் நாத இதழை சிறந்த பொலிவுடன் இனி வரும் ஆண்டுகளிலும் சங்கம் வெளியிடும் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

செல்வி. சற்சொரூபவதி நாதன்.
தலைவி
யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி நடுத்தோட்ட ராஜவரோதயர் திருவூஞ்சல்

## காப்பு

சீர்பூத்த ஈழவள நாட்டி லிலங்கு
யாழ்ப்பாண இந்துமக ளிர்கல்லூரி தனில்
நார்பூத்த நாரியர் நாளுமடி தொழுதேத்தும்
ஐங்கர! நடுத்தோட்ட ராஜவரோதயா!
பார்பூத்த பல்கலை சேர் விசாலாட்சி மூதறிஞர்
பரிவுடன் தாபித்தேத்து மொப்பிலாக்
கார்பூத்த கணபதியே நின்னூஞ்சல் பாடக்
கணபதியே யருள்கூர்ந்து காப்பதாமே.

## ஊஞ்சல்

சீரோங்கு வேதங்கள் கால்க ளாக
சிறந்தநல் லாகமங்கள் விட்ட மாக
பாரோங்கு பல்கலைகள் வடங்களாக
பன்னுமுறு கவின்கலைகள் பலகையாக
பேரோங்கு மந்திரங்கள் விதான மாக
பேசரிய பிரணவமே நற்பீடமாக
நீரோங்கு கல்லூரி நடுத் தோட்டந்தன்னின்
நின்மல வரோதயரே யாடீரூஞ்சல்.

தூயமறை முடிபுணரா ஞானத்தின் திருவுருவே
தூமறையோர் போற்று மொப்பிலா மணியே
ஆய கலைகளின் வேந்தனாம் வித்தகனே!
ஓங்கார மெய்ப்பொருளே ஐங்கரனே!
மாண்புமிகு கல்விதரு சிவஞானக் களிறே!
மானிலம் போற்ற மாணவரை வாழ வைப்பாய்!
மாளாத புகழ் சேர்க்கும் கல்லூரி நடுத்தோட்ட
ராஜ வரோதயரே யாடீர் ஊஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரணனும் நாரதரும் துதிகள் பாட
நான்முகனும் தேவர்களும் வணங்கி நிற்ப
பூரணமாய் மாணவர்கள் பொலிந்து ஆட
நாமகளும் பூமகளும் வடந் தொட்டாட்ட
காரணமாய் நின்ற எழிற் கணபதியும்
பாரதந்தான் எழுதி வைத்து வாழ்த்துக் கூற
ஓரணங்காம் வல்லமையோ டமர்ந்திருந்து
அடியார்கள் குறைதீர்க்க ஆடீரூஞ்சல்.

ஆசிரியர் ஆர்வமுடன் தம் தொழிலை ஆற்ற
அன்பாக மாணவர்கள் கல்வி ஏற்ற
தேசுபுகழ் அதிபரும் நற்கரும மாற்ற
தேன்சிந்து மினிய நல் கல்லூரியில்
சீர் பெருகு முத்தமிழன் வித்தகனே!
சிவகாம சுந்தரியின் முதல் மகனே!
ஆனந்த நடம் பயிலும் விநாயகனே!
அடியாரர்கள் இனிதிருக்க ஆடீரூஞ்சல்.

## வாழ்த்து

திருக்கோயில் அந்தணரும் அடியாரும் வாழி!
திரு நிறைந்த மாணவரும் வாழி! வாழி!
வில்வமொடு வேம்புமே உயர்ந்தே வாழி!
வித்தையும் வாழி! நல் வித்தகரும் வாழி!
இந்து மகளிர் கல்லூரி வாழி! இளமை நிறை
சிறுமிகள் வாழி! ஆசிரியர் வாழி! அதிபர் வாழி!
சிந்தூர விநாயகப்பெருமானே வாழி! நடுத்
தோட்ட ராஜவரோதயரே வாழி! என் ஆடீரூஞ்சல்.

## லாலி

சிவசக்தி பாலனுக்கு லாலி! சுப லாலி!
வித்தகனாம் வேந்தனுக்கு லாலி! சுப லாலி!
எல்லையற்ற வயிற்றனுக்கு லாலி! சுப லாலி!
எங்கும் நிறைந்தவர்க்கு லாலி! சுப லாலி!
இந்து மகளிர் கல்லூரிக்கு லாலி! சுப லாலி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுத்தோட்ட ராஜவரோதயருக்கு லாலி! சுப லாலி!
எங்கும் நிறை பூரணனுக்கு லாலி! சுப லாலி!
ஏரம்ப மூர்த்திக்கு லாலி! சுப லாலி!

## எச்சரிக்கை

மோதகப் பிரியனே முதல்வனே! எச்சரிக்கை!
முழுமுதற் கணபதியே விநாயகனே! எச்சரிக்கை!
அங்குசமும் பாசமும் சேர் அப்பனே! எச்சரிக்கை!
அடியார் தம் குறைதீர்க்கும் நாதனே! எச்சரிக்கை!

## மங்களம்

செந்தமிழ் சேர் கல்லூரிக்கு மங்களம்! சுப மங்களம்!
வந்தனை செய்யடியார்க்கு மங்களம்! சுப மங்களம்!
நடுத்தோட்ட ராஜவரோதயருக்கு மங்களம்! சுப மங்களம்!
நலஞ்சேர்க்கும் விநாயகர்க்கு மங்களம்! சுப மங்களம்!

## சுபம்

ஆக்கம்
திருமதி. த.ச. யோகீஸ்வரன்
ஆசிரியை யா. இ. ம. கல்லூரி


எங்கள் சங்கம் ஸ்தாபித்த இணையத்தளமான

web www.jhlc.lk

mail info@jhlc.lk

தொடர்ந்து நிர்வகிக்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Hinduism - How Pillayar came to be

In one of their sojourns in space, God Siva and His consort Parvathy spotted a group of elephants - males and females on earth. Goddess Parvathy was fascinated by the elephant face. She told Lord Siva it's like the word - ஓம் (Oum) the Pranava Mantram. If they could have a child like that, they could be constantly viewing the symbol of Pranava Mantram. And so Pillayar manifested himself and in Hindu Mythology he is considered as the elder child of God Siva and Parvathy. This fact is revealed in the Thevaram (psalm) "Pidiyathanuru Umai .." sung by saint Thirugnanasambandar.

There are many distorted versions of how Pillayar came to be with elephant head. One is that God Siva in anger chopped off Pillayar's head and when His Consort broke down with sorrow, He cut the head of an elephant and fixed it to His ( Pillayar's body). It is the most absurd and ridiculous explanation. People who concocted this theory, seem not to know that no Hindu God is blood thirsty - least of all God Siva, the supreme God who is compassionate and merciful. Why couldn't such writers go through texts on saivaism and the religious songs and write the correct story? Such stories mislead people of other religions and also Hindu children. Time the Saivaite leaders correct such erroneous accounts. Refined People do not run down the religious belief of the others.

There are many stories in Hindu Mythology of Pillayar. It is a given fact that even in Hindu Temples, the incumbent Deity may be God Siva or Aadi Parasakthi or Badrakali or God Murugan, the first Poosai (worshipping with flowers - (poo - flower) is done for Pillayar invoking his blessings.It is after Pillayar worship, Poosai for the other Deities are conducted.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Once there were three evil men Asuras - who were embodiments of ego, who had built their own palaces - of silver, gold and iron. Their structures were called Thiripuram. As their wickedness both towards the Devas and mortals knew no bounds, Devas and mortals appealed to God Siva to save them. So God Siva set out to put an end to the egoistic Asuras. As He left His abode, Pillayar was seated at the entrance. God Siva ignored Him and set out in His chariot. Pillayar was annoyed that He was ignored. He broke the axle of the chariot. God Siva could not proceed. But He realized why it happened. He returned, appeased Pillayar and thenset out. With one angry look and derisive laughter at the over-confidence of the Asuras ,He burnt the Thiripurams to ashes and destroyed the Asuras.

In another incident the Deva called Moon laughed at the figure of Ganesha. He cursed him to wane off. So Moon ran to God Siva for salvation. God Siva took the crescent Moon and kept him on his crown. He was pardoned and was allowed to get back his full form after waning off for 14 days. Thus we see the waxing moon. In another incident, there was a prolonged drought. Sage Agastiyar had taken all the waters of a river that ran through Thamil Nadu into his Kamandalam - the brass jug the rishis carry with them to collect water for religious rituals. The people and the Devas appealed to God Ganesha to help. He took the form of a crow .(kaka) and tipped the Kamandalam. The water spread out into a river. As it's done by the crow, the river was named kaviri (ka - crow, viri - spread). Now it has changed to Cauvery with the passage of time. Agastiyar annoyed, chased the bird. The crow changed into a small boy and ran. The sage chased him and catching him, knocked him on the head. Pillayar took his original form and Agastiyar realized, he had knocked God Pillayar on his head. The penitent sage begged pardon and the habit of devotees crossing their hands and knocking on their hands thrice, is a reminder of the incident.

In Hindu Mythology there are so many stories of Pillayar. Mythology is not the religion. Neither is it the essence of religion. Mythology should not be mistaken for Hinduism. Like morality plays, the stories in Mythology teach people to choose righteous living. Teach people to distinguish between good and bad, between right and wrong and give lessons in humanitarian deeds. There are stories about Gods who help genuine devotees, desperate ones and prove the fact their Presence is always there to help the good and the sincere. Even animals in need are helped by the Gods.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Many would be familiar with the story of the ripe mango fruit and the competition between God Pillayar and boy God Murugan. Sage Narada is famous for involving two parties in a fight. Though he does it out of mischief, finally he sees to it that all ends well.

Once he went to Mt. Kailas, the abode of God Siva with a ripe mango and offered it to God Siva, which He gave to His Consort Parvathy. Both Pillayar and Murugan wanted the mango. God Siva told Sage Narada to solve the problem he created. Sage Narada told Pillayar and Murugan, "Whoever comes round the universe first will receive the mango." So off went Murugan on His peacock, Pillayar of course has only a rat as his vahana. What would he do? He looked worried. Sage Narada told Pillayar, "Why are you hesitating. Aren't your parents your entire universe. Go round them and claim the mango." Pillayar did likewise and got the mango. Murugan came flying back on his peacock and when He saw the mango in Pillayar's hand, flew into a tantrum and denouncing all He had, left in a loin cloth and settled on the hills of Palani in Thamil Nadu. This mythological story gives a message to the children. their parents are the first Gods for them. Worship them, revere them. How Murugan was appeased is another story. Thus mythological stories which are often presented in the form of dance and dramas bring out the messages contained in them. The question often asked is why is Pillayar such a big figure having a rat as His vahana. Mythology explains that in the story of a Kantharvan called Kiravunchan - கிரவுஞ்சன்.

This Kantharvan once tried to seduce the wife of a rishi called Sabari. The Rishi caught him redhanded and cursed him to be a rat - the rodent that digs the soil and lives in a rat hole. The offender fell at his feet and begged pardon. The Rishi relented and told him, " In the hermitage (ashram) of Parasara Rishi, Lord Ganesha you will find. He will make you His vahana." As said Pillayar was there being cared for by Parasara Rishi. This rat - rather mole was playing havoc in the garden of the Rishi. Unable to stand the destruction of the plants in his garden, the Rishi turned to Pillayar for help. Pillayar sent his weapon to destroy the animal. It burrowed deep into the earth's bowels. The weapon followed him and dragged him back. He fell prostrate at the feet of Pillayar and told his history. Pillayar felt sorry for him and took him as His vahana. That's how says this mythological story, Pillayar has the rodent as His vehicle. The pictures depicting Pillayar on the rodent, may make one think how could such weighty figure ride on a meek mouse. The spiritual aspect is

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the picture represents Pillayar, not in the physical form but in the Astral form which is weightless. That is the philosophy behind this story.

There are many epithets of Pillayar. Sage Viyasar was the one who told the story of Mahabaratha. He requested Pillayar to write it down as he related it. Pillayar agreed to do so on one condition - that Viyasar should not pause to think even. He should continue to dictate the story non-stop. So Viyasar started to relate the story. Pillayar broke one of His tusks to inscribe the story on ola leaves. Since He has only one tusk he is known as "Ekathanthan".

As He removes the hardships (vigna) in the life of His devotees He is called Vignesha.

Gana-Esha - God with elephant face.

Sithi Vinayaka - He brings success to those who pray to Him.

Pranava Rupa - One who has the face, the form of the Pranavamanthiram.

Vela Muha - Vela - Elephant Muha - face

Iynkaran - Panchakaran - with five hands - the four form the body plus the trunk.

Uma Sudan - Son of Uma (Goddess Parvathi)

Pillayar Poosai is done before anyone sets out on any business.

Thilaka V. Wijeyaratnam

Courtesy:- Daily News

**யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவச் செல்வங்களின் சாதனை**

தமிழ்மொழித் தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம்

இசையும் அசைவும் 1ஆம் இடம்:-பிரிவு-1 செல்வி. பவித்திரா குமரகுருபரன்

ஆக்கத்திறன் வெளிப்பாடு1ஆம் இடம்:-பிரிவு-1 செல்வி. துளசிகா மூர்த்தி

ஆகியோரை எமது சங்கம் பாராட்டி வாழ்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரை இருந்த தையல்

இந்திய நாட்டின் கலை பண்பாடு எல்லாவற்றையும் மேல் நாடுகளில் மாத்திரமல்ல, உலகம் முழுவதுமே பரப்பிய பெருமை கலாநிதி ஆனந்தகுமாரசாமி என்ற எமது நாட்டவரையே சாரும்.

ஒரு நாள் அவருடன் பல கலைஞர்கள் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு நண்பர் ஒரு கேள்வி கேட்டார். அந்தக் கேள்வி இதுதான் எந்தப் பொருள் ஒன்று இல்லாவிட்டால், இந்திய இலக்கியமும் ஓவியமும், சிற்பமும் வெறிச்சோடிபோய்விடும்? கலைஞர்கள் பதில் சொல்லச் சிந்தித்தனர். கலையுலகில் பயன்படும் அத்தனை பொருட்களும் அவர்கள் மனக் கண் முன் வந்து சென்றன. ஆனால், கலையின் ஜீவநாடியான பொருள் இன்னது என்று அவர்களால் தெரிந்து சொல்ல முடியவில்லை.

ஆனால், கலாநிதி ஆனந்தகுமாரசாமி ஒரே வார்த்தையில் பதில் சொன்னார். அவர் சொன்ன பதில் 'தாமரை' என்பதுதான். ஆம்! எமக்கெல்லாம் கலையுலகில் தாமரையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. பெரிய காவியம் ஆயினும் சரி, இல்லை அஜந்தா சித்திர உலகம் ஆயினும் சரி, இல்லை அரிய சிற்பக் கூடம் என்றாலும் சரி, ஏன் நடன நாட்டியக் கச்சேரி என்றாலும் சரி, இந்தக் கலைகளை எல்லாம் வளம் படுத்தும் பொருள் தாமரையாக இருப்பதைத்தான் பார்க்கிறோம். "பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை" என்றும். 'பூவெனப்படுவது பொறி வாழ்பூவே' என்றும் தெரியாமலா சொல்லி வைத்தார்கள்? உலகிலுள்ள அழகெல்லாம் வந்து குடியிருப்பது பெண்ணில்தான். அந்தப் பெண்ணின் முகம், கண், வாய், கை, கால் முதலிய அவயங்களுக்கும் உவமை தேடித்திரியும் கலைஞன் சென்று சரண் அடைவது தாமரை மலரிடம் தான்.

திருமுகம் கமலம், இணைவிழி கமலம்,
செய்யவாய் கமலம், நித்திலம் தாழ்
வருமுலை கமலம், துணைக் கரம் கமலம்,
வலம்புரி உந்தி பொற் கமலம்,
பெருகிய அல்குல் மணித்தடம் கமலம்,
பிடிநடைத் தாள்களும் கமலம்,
உருகவட்டு அவ்வாறு ஆதலின் அன்றே
உயர்ந்தது பூவினுட் கமலம், (இது தணிகைப் புராணப் பாடல்)

வண்ணத்தாலும், வடிவத்தாலும், மென்மையாலும், மணத்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுடையதாக கவர்ச்சி நிறைந்ததாக இருக்கும் பொருள் தாமரை. அதனால்தான் எல்லாச் சமயத்தாராலும் தூய்மைக்கு அடையாளமாகவும், தெய்வங்களுக்கு உறைவிடமாகவும் அம்மலர் கருதப்படுகிறது.

தாமரையில் பல வகையிருப்பினும் சாதாரணமாக நாம் காண்பது செந்தாமரையும், வெண்தாமரையுமே. இந்து மதத்தைப் பொறுத்தவரை செந்தாமரையை தன் இருப்பிடமாகக் கொண்டு வாழ்பவள் செல்வத்திற்கே அதிதேவதையான லட்சுமி. அதுபோல வெண்தாமரையைத் தன் இருப்பிடமாகக் கொண்டு அருள் புரிகின்றவள் சரஸ்வதி.

மலரின் மேவு திருவாக லட்சுமியை உருவகம் செய்த கவிஞனே!
"வெள்ளைத் தாமரைப் பூவிலே இருப்பாள், வீணை செய்யும் ஒலியில் இருப்பாள், கொள்ளை இன்பம் குலவு கவிதை கூறு பாவலர் உள்ளத்திருப்பாள்" என்று போற்றித் துதிக்க மறக்கவில்லை. இவ்விதம் தாமரை இருந்த தையலை கலைமகளை, கலைஞர் உலகம் எப்படிக் கண்டிருக்கிறது, உருவாக்கியிருக்கிறது, போற்றி இருக்கிறது என்று பார்ப்போம்.

கலைமகளை பாடாத கவிஞர் இல்லை. கவிச் சக்கரவர்த்தி கம்பன் கலைகளுக்கு வணக்கம் செலுத்த ஒரு அந்தாதியே பாடியிருக்கிறான். அதில் உலகில் உள்ள பொருள்கள் அனைத்திலும், அழியாத சிறந்த பொருளாக இருப்பது கலைமகள் உணர்த்தும் கலைப் பொருள்தான் என்று சொல்கிறான்.

வைக்கும் பொருளும் இல் வாழ்க்கைப்
பொருளும் மற்றைப் பொருளும்
பொய்க்கும் பொருளன்றி நீளும்

பொருளல்ல, பூதலத்தின்
மெய்க்கும் பொருளும் அழியாப்
பொருளும் விழுப்பொருளும்
உய்க்கும் பொருளும் கலைமான்

உணர்த்தும் உரைப்பொருளே!

என்பது அந்தப் பாடல். கம்பனைப்போலவே கலைமகள் அருள் பூரணமாகப் பெற்றவர் குமரகுருபரர். அவரும் அச் சகலகலாவல்லிக்கு ஒரு பாமாலை புனைந்து சாற்றுகிறார். அவர் கலைமகளை

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளிதெய்த நல்
காய் எழு தாமரையும்

விண்ணும் புவியும், புனலும்
கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலகலா வல்லியே!

என்று துதிக்கிறார். இவர்களை எல்லாம் தூக்கி அடிக்கும் வகையில் இன்றைய கவிஞர் ஒருவர் பாடுகிறார்.

கல்வி என்றால் ஏட்டுக்கல்வி மட்டும் அல்ல என்று எண்ணுகின்ற காலம் அல்லவா இது? ஆகவே அவள் அருள் ஏர் பிடித்து உழுபவனுக்கும் வேண்டியிருக்கிறது. நூல் நூற்று ஆடை நெய்பவனுக்கும் வேண்டியிருக்கிறது. மண் வனைந்து வீடு கட்டுபவனுக்கும் வேண்டியிருக்கிறது. அறிஞனுக்கும் அவளருள் வேண்டியுள்ளது. ஆதலால் நிலம் உழுபவனது கரத்திலும், காவியம் எழுதும் கவிஞர் நாவிலும், உலக வளர்ச்சிக்கு உதவும் அறிஞர் நெஞ்சிலும் அவள் இடம்பிடித்து உட்கார்ந்திருக்கிறாள். இதனை இப்படிப் பாடுகிறார் கவிமணி தேசிகர் விநாயகம்பிள்ளை.

நாடிப் புலங்கள் உழுவார்
கரமும் நய உரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர்
நாவும் செழுங்கருணை
ஓடிப்பெருக்கும் அறிவாளர்
நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்
பாதம் அடைக்கலமே.

இப்படி எல்லாம் கவிஞர் நாவில் நின்ற கலைமகள் சிற்ப சித்திர உலகில் நிலைக்காதிருப்பாளா? கலைமகள் என்று இன்று வீடுதோறும் வைத்துப் பூ ஜிக்கப்படும் படம் ஓவியர் ரவிவர்மா எழுதிய படமாகத்தான் இருக்கும்.

ஆனால் அந்தக் கலைமகள் வெண்தாமரையில் வீற்றிருக்கவில்லை. இதனால் அவளிடத்தில் அழகு இருந்தும் அருள் இல்லை என்றே பல கலைஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

உண்மையில் தாமரையில் இருக்கும் தையலாக அவளைக் காண கங்கை கொண்ட சோழபுரக் கோவிலுக்குப் போக வேண்டும். அங்கு ஞானக் கலையுடன் கம்பீரமாக தாமரையில் கலைமகள் இருக்கும் சிற்பத்தைக் காணலாம். சோழர் காலத்துச் சிற்பிகள் கல்லில் மாத்திரமல்லாது செப்பிலும் தாமரைக்கு முக்கியத்துவம் கொடுத்தே கலைமகளுக்கு சிலை அமைத்தனர்.

அகன்று விரிந்த தாமரை மலரிலே அர்த்தபத்மாசனத்திலே அவள் இருக்கிற கோலம் அழகொழுக இருக்கும் கண்ணில் தேங்கியுள்ள அருளும், முகத்தில் மிளிரும் பொலிவும்கண்டாரை எல்லாம் கனிவு கொள்ளச் செய்யும் சோழ சாம்ரா ஜ்யம் உன்னதமாக இருந்த காலத்தில் உருவானவள் அல்லவா? ஆதலால் சிற்பக் கலை உலகிலும் ஓர் உன்னத நிலையை வகிக்கிறாள் இந்த தாமரை இருந்த தையலாள்.

செல்வி. சற்சொரூபவதி நாதன்.

நன்றி:- சங்கமம் சனிக்கிழமை, மார்ச் 07, 2009. பக்கம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு பள்ளிக் கூடம்
# யாழ் இந்து மகளிர் கல்லூரி

அவளும் நானும் - யார் இந்த அவள்? அவள் தான் எனது கல்லூரித்தாய் - அவளை - என்னைக் கல்வித் தளத்தில் கால் பதிக்க வைத்த தாய் என்பேனா? இல்லை, என் அருமைத் தோழி என்பேனா? அன்றும் இன்றும் அவள் எனக்கு இனியவள், எளியவள்.

1940 களில் யாழ் இந்துக் கல்லூரியில் எனது ஆண்டு 6 கல்வி ஆரம்பமானது. யாழ் இந்துக் கல்லூரி - பழைய மாணவி நான் என்று, இன்று நான் கூறினால், எவருமே அதனை ஏற்கத்தயாராய் இல்லை. யாழ்/ இந்து. அது ஆண்கள் பாடசாலை யல்லவா? என்ற வினாதான் முன்னே கொக்கி போட்டு நிற்கும். நம்பித்தான் ஆக வேண்டும். ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். காரணம் யாழ்/ இந்து ஆரம்பத்தில் பெண் பிள்ளைகளையும் பெருந்தன்மையுடன் ஏற்று, கல்வி அளித்தது. அதில் தான் எமக்கு எத்தனை பெருமிதம்!!

அன்பான அதிபர் திரு A. குமாரசுவாமி; அங்கு பாடசாலை வளவின் மத்தியில் அமைந்த வைரவர் கோமில், 'அன்னம்மா ரீச்சர்' அடி போட்டு, ஆங்கிலம் கற்பித்த, கொண்டல் மரத்தடி வகுப்பு - கருணையுடன் எமக்கு கல்வி தந்த கருணாதேவி ரீச்சர் - நாம் காலாற ஓடித்திரிந்த யாழ்/ இந்து கல்லூரி விளையாட்டு மைதானம் - ஒவ்வொரு பாடமும் முடிய படியேறி மணி அடிக்கும் ராமசாமி அண்ணா, அப்பப்பா! வாழ்வில் மறக்க முடியுமா இவற்றை!

இந்து மகளிர் கல்லூரி ஒன்று ஸ்தாபித்தால் என்ன? என்றதோர் உயர்வான நல்ல நோக்கம் பாடசாலை நிர்வாக சபையினரிடையே தோன்றவே, தற்காலிகமாக கொட்டகைகளை போட்டு, வகுப்புக்களாகப் பிரித்து யாழ்/ இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தின் ஒரு கரையோரமாக பெண்களுக்கென தனிப்பாடசாலையாக எமக்கெனவொரு கல்லூரி அமைக்கப் பெற்றோம். அதுவும் சில காலம்தான் பின்னர், இப்போது இந்து மகளிர் கல்லூரி அமைந்திருக்கும் "நடுத்தோட்டம்" என்னும் வளவின் முன் அமைந்த திரு பொன்னுச்சாமி என்பவரது நாற்சார வீட்டில் எமது இந்து மகளிர் கல்லூரி இயங்கலாயிற்று -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது எங்களுக்கு கல்லூரி அதிபராக இருந்தவர் செல்வி. காயத்திரி பொன்னுத்துரை அவர்கள்.

அவர் சிறிய தோற்றம் உடையவராகக் காணப்பட்டபோதும் "கடுகு சிறிதுஎனினும் காரம் பெரிது" என்ற வார்த்தைக்கிணங்க, மிகவும் ஆளுமை, ஆற்றல், நிதானம், கண்டிப்பு அதே நேரம் புரிந்துணர்வு கொண்ட அதிபராக விளங்கினார். தொடர்ந்து திருமதி சிற்றம்பலம் அவர்கள், எமது அதிபராகக் கடமை ஏற்றார். மிகுந்த அமைதி, மென்மை, ஆனால் ஆற்றல் கொண்ட ஒரு சாதுவான பெண்மணியாகக் காட்சி தந்தார். இவர் இந்து மகளிர் கல்லூரியில் ஒரு தென்றல்.

அடுத்த கட்டமாக திரு. சிவகுருநாதர்., திருமதி. விசாலாட்சி சிவகுருநாதர் தம்பதிகள் மனமுவந்து தங்கட்குரிய "நடுத்தோட்டத்தில்" உள்ள காணியை எமது கல்லூரிக்கு அன்பளிப்பாகத்தரவே, அங்கு எமது கல்லூரி மிகப் பெரிய அளவில் பல கட்டங்களுடன் புதியதோர் பொலிவைப் பெற்று இந்து மகளிர் கல்லூரி எனத்துலங்கலாயிற்று.

இந்தக் காணியுள் நாம் குடிபுகுமுன்னமே, அங்கு ஏற்கனவே அமைந்திருந்த ஒரு பிள்ளையார் கோயில் எமை வர வேற்றது – அங்கு எழுந்தருளியுள்ள விக்னேஸ்வரப் பெருமானே எங்கள் இந்து மகளிர் கல்லூரியை அன்றும் இன்றும் கட்டிக்காத்து வருகின்றார் என்றால் மிகையாகாது.

இங்கு நாம் சந்தித்த அதிபர்கள் மிகப் பலர். திருமதி. மொற்வாணி என்ற ஓர் அமெரிக்கப் பெண்மணி – இவர் அமெரிக்க நங்கையாக இருந்தாலும் எங்கள் பாணியில் புடவை கட்டி இந்து கலாச்சாரம் மிளிர, மிக்க மிடுக்குடன் எங்கள் கல்லூரி உயர பலபடிக் கற்களாக அமைந்தவர் என்றால் மிகையாகாது.

முதல் வேலையாக எங்கள் கல்லூரி முன்றலில் பெரியதோர் நிரந்தர சிமேந்து மேடை அமைத்து அன்றாட சமய இலக்கிய கலை நிகழ்ச்சிகளை மாணவர்களைக் கொண்டு அதில் நடாத்திய பெருமை இப்பெண்மணியையே சாரும். இந்த அழகான மேடையில் தினமும் நான் பிரார்த்தனைக் கீதங்கள் பாடிய துண்டு. நாடக இசைப் போட்டியில் பாடிப் பரிசில்களைத் தட்டியதுமுண்டு. நாடகங்கள் நடித்ததுமுண்டு, நவராத்திரி நாட்களிலே தேவி பூசையின் போது கும்மி கோலாட்டம் அடித்து மகிழ்ந்ததுமுண்டு.

தொடர்ந்து இந்தியாவைச் சேர்ந்த தெலுங்குப் பெண்மணி திருமதி. சரோஜினி ராவ், எங்களை கவர்ந்த எமது கல்லூரி அதிபராக அமைந்தார். அவரது கம்பீரமான தோற்றமும் மிடுக்கான நடையும் உரத்த குரலும், கண்களிலே விவேகமும் எங்கள் எல்லோரையும் கவர்ந்ததில் வியப்பில்லை. இந்த நல்ல அதிபரது கால கட்டத்திலே எமது பாடசாலையில் ஒரு "களியாட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா" (CARNIVAL) நடாத்தி நிறையப் பணம் கல்லூரி நிதிக்குக் கிடைத்ததால் கல்லூரி மேலும் மேலும் பல கட்டடங்கள் பிரமாண்டமான சுற்று மதில், ஆய்வு கூடங்கள், நூலகம் என வளரலாயிற்று.

இந்த நிறைவான, வளமான கால கட்டத்திலே யான் எனது உயர் கல்வியை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொடர தமிழ் நாடு சென்று விட்டேன். தொடாந்து திருமதி. விமலா ஆறுமுகம், செல்வி. பத்மா இராமநாதன் கல்லூரியின் அதிபர்களாக கடமை ஏற்று இந்து மகளிர் கல்லூரியை வனப்புடன் வளமானதாய் யாழ் நகரிலே கொடி கட்டிப்பறக்கவைத்தார்கள் எனலாம்.

எனது கல்லூரியின் ஆசீர்வாதத்துடன் யான் பொருளாதாரப் பட்டதாரியாகி, பின்னர் இந்து நாகரிகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றேன். 22 வருடங்கள் ஆசிரியராகவும், 11 வருடங்கள் அதிபர் ஆகவும் கடமையாற்றினேன். இவ்வேளையில் என்னை இக்கல்லூரியில் புடமிட்டுப் பொன்னாக்கிய என் நெஞ்சம் நிறைந்த ஆசிரியப் பெருந்தகைகளைப் பற்றி ஒரிரு வார்த்தைகள் சொல்லுதல் எனது தலையாய கடமையாகும்.

எமக்கு புவியியல், உடற்பயிற்சி ஆகிய பாடங்களை கற்றுத்தந்து எம்மை நெறிப்படுத்திய திருமதி. லீலா நாகரத்தினம், (செல்வி. லீலா பொன்னையா) எமக்கு ஆங்கில இலக்கியம் போதித்த செல்வி. விஜயலட்சுமி பதி, இவர் ஆங்கில இலக்கிய கதைகளை நடித்தே காட்டி கதை கதையாய் கூறி எம்மை ஐரோப்பிய நாடுகளுக்கே அழைத்துச் சென்று விடுவார். அவர் விளக்கிக் கூறிய "Merchant of Venice" "Macbeth" "Romeo And Juliet" "Antony And Cleopatra" 'Julius Caeser" "Mid Summer Night Dream" 'Cyndalyne" இந்த நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களை அந்தமாதிரி தன் விளக்கத்தின் மூலம் எம் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்தி அசத்தியவர் செல்வி. பதி.

அடுத்து எமக்கு அழகு தமிழ் கற்பித்த எங்கள் அன்பிற்குரிய ஆசிரியை செல்வி. சிவபாக்கியம் கனசபை, கணித பாடத்தையும் கல கலப்பாக எமக்குப் புகட்டித் தந்த செல்வி. தம்பு ஆசிரியை, மேலும் ஆங்கிலத்தை அட்டகாசமாகக் கற்றுத் தந்த மிஸ் ஐயர் அவர்கள். இவர்கள் எல்லாம் எமது மாணவப் பருவ விண்ணிலே ஜொலித்த நட்சத்திரங்கள் அல்லவா!

நட்பின் இலக்கணமாய் பசுமை நிறைந்த பள்ளிக் கூட நாட்களை அடிக்கடி என் மனதில் மீட்ட என்னைச் சுற்றி இங்கு கொழும்பில் நான் காணும் என் பாடசாலைத் தோழிகளையும் நான் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். எத்தனை தோழிகள்! அத்தனை நட்பு! அவர்கள் எல்லாம் உலகளாவப் பரந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றார்கள். அவர்களும், இங்கு நான் அடிக்கடி சந்தித்து மனம் விட்டு அளவளாவும் என் உயிர்த் தோழிகள் செல்வி. சற்சொரூபவதி நாதன், திருமதி. பத்மா சோமகாந்தன், திருமதி. திலகா விஜயரட்னம், திருமதி. நீலாயதாட்சி பிளாகபாணி, அன்புடன் நான் அக்கா என்றழைக்கும் வள்ளி அக்கா, புவணி என்று நான் செல்லமாக அழைக்கும் திருமதி. புவனேஸ்வரி திருமதி. ஞானேஸ்வரி ஞானசேகரம், திருமதி. கமலா இராசரத்தினம், திருமதி. தயாநிதி, திருமதி. கயிலாசபிள்ளை இவர்கள் என் நட்புப் பூங்காவில் தினமும் அன்றலர்ந்த மலர்களாய் இனிய மணம் பரப்பி நிற்கும் வண்ண மலர்கள் என்றால் அது நிஜம். வாழ்க நீவிர் பல்லாண்டு.

கல்வி தந்து சமுதாயத்தில் என்னையும்
ஒரு கற்றவளாக இனங்காட்டிய
என் உயிரினுமினிய கல்லூரியே!
என் நெஞ்சை விட்டகலா
இந்து மகளிர் கல்லூரிச் செல்வமே!
பூமி உள்ள வரை நீ பூத்துக்குலுங்கிட
சாமி உனக்கருள வேண்டி நிற்கின்றேன்
பாதையும் திறந்தாயிற்று -
வருவேன் நான் உனது மாளிகையின் வாசலுக்கே!

என்றும் உன் அன்பகலா மாணவி,
கலாபூசணம் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு
முன்னாள் அதிபர்,
யாழ். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.
கொழும்பு.
*10-03-2010*

## முன் அட்டைப் படம்

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் உள்ள நடுத்தோட்ட இரா ஜவரோதயப் பிள்ளையார் கோவிலின் முகப்புத் தோற்றம்.

உற்சவ மூர்த்தி, மூலஸ்தான மூர்த்திக்கு கும்ப அபிஷேகம் நடைபெறுகின்றது. அலங்காரத்துடன் மூலமூர்த்தியின் தோற்றம்.

வெளி மண்டபத்தின் தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை"

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு நடாத்திய

# சர்வதேச மகளிர் தின நிகழ்வு

இந்த நிகழ்வு பம்பலப்பிட்டியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் 17.03.2010 புதன் கிழமை மாலை 6.00 மணி தொடக்கம் 8.00 மணி வரை நடைபெற்றது. இவ்விழாவுக்கு சங்கத் தலைவி செல்வி. சற்சொரூபவதி நாதன் அவர்கள் தலைமை வகித்தார்கள். பிரதம விருந்தினராக திருமதி. சந்திரா பரமேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக திருமதி. அன்னலட்சுமி இராஜதுரையும் வருகை தந்திருந்தார்கள்.

* * * * * * * *

சிறப்பு நிகழ்வாக யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகளான திருமதி. திலகா விஜயரட்னம், திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு ஆகியோர் சிறந்த பெண்மணிகளாகப் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

* * * * * * * *

திருமதி. கௌரி ரமணா அவர்கள் 'அனைவருக்கும் இந்த இனிய மாலைப் பொழுதில் எனது மாலை வணக்கத்தை தெரிவித்து, யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு நடாத்தும் சர்வதேச மகளிர் தினத்திற்கு வந்த உங்களை வரவேற்கின்றேன்' எனத் தெரிவித்து இந்த நிகழ்வினை தொகுத்து வழங்கினார்.

* * * * * * * *

மங்கல விளக்கேற்றல்:- மங்கல விளக்கேற்றியோர் பிரதம அதிதி திருமதி. சந்திரா பரமேஸ்வரன், சிறப்பு விருந்தினர் திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை, விழா நாயகிகளான திருமதி. திலகா விஜயரட்னம், திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு, சங்கத் தலைவி செல்வி. சற்சொரூபவதி நாதன், உபதலைவிகளான திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை, திருமதி. தயாநிதி செல்வநாயகம், திருமதி. தற்பராதேவி தில்லைநாதன், யாழ் நாதம் இதழ் ஆசிரியை திருமதி. விமலா மணிவாசகன், சங்கப் பொருளாளர் செல்வி. சிவமலர் சுப்பிரமணியம், இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. கோதை நகுலராஜா, சைவமங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி. பத்மா கஜேந்திரதாஸ், திரு. வி. கயிலாசபிள்ளை, கலாநிதி வி. அம்பலவாணர் ஆகியோர் ஆவார்.

* * * * * * * *

திருமதி. சத்தியலட்சுமி சிவலிங்கம் அவர்கள் தேவாரம் பாடினார்கள். சங்க அங்கத்தவர்கள் எல்லோரும் சேர்ந்து பாடிய கல்லூரி கீதத்துடன் விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமானது.

* * * * * * * *

குழந்தை முதல் முதியோர் வரை வானொலியூடாக எல்லோர் மனத்திலும் பதிந்த எமது சங்க முதல் தலைவியும், தற்போதைய சங்கத் தலைவியுமான செல்வி. சற்சொரூபவதி நாதன் தலைமையுரையாற்றினார்.

* * * * * * * *

பிரதம அதிதி திருமதி. சந்திரா பரமேஸ்வரன் அவர்கள் எமது பாடசாலையின் பழைய மாணவி தற்போது லண்டனில் வசித்து வருகின்றார். இவர் லண்டன் பழைய மாணவிகள் சங்கத்தின் தலைவியாக இருந்து துடிப்பாக சேவையாற்றியவர். அவர் பிரதம அதிதி உரையையாற்றினார். இவருக்கு சங்கத்தின் சார்பில் செல்வி. சற்சொரூபவதி நாதன் மாலை அணிவித்தார். திருமதி. சத்தியலட்சுமி சிவலிங்கம் அவர்கள் பொன்னாடை போர்த்தார்.

* * * * * * * *

பிறகு சிறப்பு விருந்தினர் திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை உரையாற்றினார். இவருக்கு சங்கத்தின் சார்பில் திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை மாலை அணிவித்தார்.

* * * * * * * *

அடுத்ததாக யாழ் நாதம் இதழ் 16 வெளியிடப்பட்டது. அதன் ஆசிரியை திருமதி. விமலா மணிவாசகன் முதற் பிரதியை திருமதி. அபிராமி கயிலாசபிள்ளைக்கு வழங்க அவர் அதனை பிரதம அதிதி திருமதி. சந்திரா பரமேஸ்வரனுக்கு வழங்கினார். யாழ் நாதம் இதழை சபையோருக்கு விநியோகித்தோர் திருமதி. ஞானேஸ்வரி ஞானசேகரம், திருமதி. உஷா சிவராஜா ஆகியோர்.

* * * * * * * *

அடுத்த நிகழ்வாக விழா நாயகிகளான திருமதி. திலகா விஜயரட்னம், திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு ஆகியோர் கௌரவிக்கப்பட்டார்கள். சங்கத்தின் சார்பில் செல்வி. சற்சொரூபவதி நாதன் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுருவுக்கு பொன்னாடை போர்த்தார். திருமதி. திலகா விஜயரட்னம் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை பொன்னாடை போர்த்தார். திருமதி. தயாநிதி செல்வநாயகம், திருமதி. தற்பராதேவி தில்லைநாதன் ஆகியோர் சங்கத்தின் சார்பில் விழா நாயகிகளுக்கு மாலை அணிவித்தார்கள். பிரதம அதிதி திருமதி. சந்திரா பரமேஸ்வரன் அவர்கள் சான்றிதழை விழா நாயகிகளுக்கு வழங்கினார். சபையோரும் அவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார்கள்.

* * * * * * * *

பின்னர் 'சகலகலா வித்தகி' செல்வி. சற்சொரூபவதி நாதன் விழா நாயகிகளைப் பற்றி உரையாற்றினார்.

* * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைத் தொடர்ந்து பல மன்றங்களில் தலைவி, செயலாளர், பொருளாளர் என பொறுப்பான பதவிகளில் இருந்து துடிப்பாக சேவை செய்து வருகின்றவரான 'பார் புகழ் சேவகி' திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் உரையாற்றினார்.

* * * * * * * *

பிறகு ஆசிரியராகவும் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் இருந்து பல மாணவ மணிகளின் மனத்தில் இடம் பெற்ற எமது கல்லூரியின் புகழ் பூத்த மாணவி திருமதி. தயாநிதி செல்வநாயகம் உரையாற்றினார்.

* * * * * * * *

இவரைத் தொடர்ந்து சைவமங்கையர் வித்தியாலயத்தில் அரசியல், விஞ்ஞான ஆசிரியையும் இந்து மகளிர் பேரவை உறுப்பினருமான திருமதி. வளர்மதி சுமாதரன் அவர்கள் திருமதி. திலகா விஜயரட்னத்தைப் பற்றி உரையாற்றினார்.

* * * * * * * *

பின்பு திருமதி. சத்தியலட்சுமி சிவலிங்கம் அவர்கள் உரையாற்றினார். இவரின் பிள்ளைகளும் எமது பாடசாலையிலே படித்து பாடசாலைப் பெயரை நிலைநாட்டியவர்கள். இவரது மகள் ஒருவர் தற்போது நியூசிலாந்தில் வைத்திய கலாநிதியாக இருக்கின்றார்.

* * * * * * * *

வலயக் கல்விப் பணிப்பாளராக கல்வித்துறையில் சிறந்து விளங்கியவரும் பிரபல எழுத்தாளரும் உளவள ஆலோசகருமான திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் உரையாற்றினார்.

* * * * * * * *

விழா நாயகிகளான திருமதி. திலகா விஜயரட்னம், திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு ஆகியோர் தமது ஏற்புரையை வழங்கினார்கள்.

* * * * * * * *

அடுத்த அம்சமாக எமது காதுகளை குளிர்வித்த திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுருவின் மாணவிகளின் வீணை நிகழ்ச்சி இடம் பெற்றது.

* * * * * * * *

இறுதி அம்சமாக நன்றியுரை:- எமது சங்கச் செயலாளரும், இளம் துடிப்பான அங்கத்தவருமான திருமதி. கௌரி ரமணா அவர்கள் "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்நன்றி கொன்ற மகற்கு" என்னும் திருக்குறளை நினைவு கூர்ந்து தனதும் மற்றும் சங்க அங்கத்தவரின் நன்றிகளை சகலருக்கும் கூறினார்.

* * * * * * * *

தேவாரத்துடன் இவ்விழா இனிதே நிறைவு பெற்றது.

* * * * * * * *

விழா நடுவில் எல்லோருக்கும் விருந்துபசாரமும் இடம் பெற்றது. இந்த விருந்துபசாரத்துக்கு சகல வகையிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது சங்கத்தின் நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பார் புகழ் சேவகி'
# திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் உரை

செல்வி. சற்சொரூபவதி நாதன் அவர்களே, திருமதி. சந்திரா பரமேஸ்வரன் அவர்களே, திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை அவர்களே, திருமதி. திலகவதி விஜயரட்ணம் அவர்களே, திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்களே, மற்றும் எமது சங்க அங்கத்தவர்களே, சகோதரிகளே, உங்கள் எல்லோருக்கும் எனது மாலை வந்தனம்.

சர்வதேச மகளிர் தின நிகழ்வாக இன்று யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தால் (கொழும்பு) எமது பழைய மாணவிகளாகிய திருமதி. திலகவதி விஜயரட்ணம் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு இருவரும் சிறந்த பெண்மணிகளாக பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு இளவயதிலேயே தமது ஆசிரியைத் தொழிலை வல்வெட்டி சிதம்பராக் கல்லூரியிலும் பின் பருத்தித்துறை மெதடிஸ்ற் கல்லூரியிலும் பின்னர் மாத்தளை பாக்கியம் மகாவித்தியாலயத்திலும் பிறகு நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலத்திலும் ஆசிரியையாக இருந்து பின் அதிபராக உயர்ந்து இளைப்பாறியவர். இவர் மணமான பின்தான் வீணை கற்கத் தொடங்கினார். இவரின் கணவர்தான் இவரின் கலையார்வத்தை அறிந்து அவரை வீணை கற்க ஊக்கப்படுத்தினார். இன்றும் பல பிள்ளைகளுக்கு வீணை கற்றுக் கொடுக்கிறார்.

இவர் அதிபராக இருக்கும்பொழுதுதான் இந்து நாகரிகத்தில் M.A. பட்டம் பெற்றார். இப்பொழுது பிரபல எழுத்தாளராக பத்திரிகைகளுக்குப் பல சமயக் கட்டுரைகள் எழுதி வருகின்றார். சென்றவருடம் 'இந்து மத விரதங்கள்' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இப்படிப்பட்ட ஒருவரை கௌரவிப்பதில் நாம் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம். இவர் பல்லாண்டு வாழ்ந்து நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.!

திருமதி. திலகவதி விஜயரட்ணம் எங்கள் எல்லோருக்கும் மிகவும் பரிச்சயமானவர். இவரின் குடும்பத்தில் எல்லோரும் கல்வியிற் தேர்ந்தவர்கள். பலர் சிறந்த ஆசிரியர்கள். திருமதி. திலகவதி விஜயரட்ணமும் சிறந்த ஆசிரியை. "ஆசிரியைத் தொழிலில் ஐம்பது வருட அனுபவங்கள்" என்னும் இவரின் படைப்பே இதற்குச் சான்றாகும். இவர் மாலைதீவிலும் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். முறைசாராக் கல்வி பற்றியும், சமயசார்பான நிகழ்ச்சிகள் பலவும் வானொலியில் நடத்தியுள்ளார். பல சிறப்பான ஆன்மிகக் கட்டுரைகள் இப்பொழுதும் பல பத்திரிகைகளில் எழுதி வருகின்றார். இக்கட்டுரைகளைப் படித்துவிட்டு இவர் யார்? எனப் பலர் கேட்டிருக்கின்றார்கள். அப்பொழுது நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையுடன் இவர் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவி என்று சொல்லிப் பெருமைப்படுவோம்.

Spirit of the Palmyrah என்னும் நூலில், யாழ்ப்பாணத்தில் சிறப்புப் பெற்றவர்களைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதுவதில் மட்டுமல்ல பேச்சிலும் வல்லுனர். இவர்கள் இருவரும் 'ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண்' என்று நிலை நாட்டியுள்ளனர். இப்படிப் பட்டவர்களைக் கௌரவிப்பதில் நாம் மிக மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம். இவர்கள் பல்லாண்டு வாழ்ந்து நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள்வாராக.

இன்றைய காலகட்டத்தில் பல சிறுமிகள் போராட்டத்தில் பங்கு பற்றி இப்பொழுது புனர்வாழ்வு முகாம்களில் பயிற்சி பெறுகின்றார்கள். இவர்களில் பலர் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இப்பொழுது சகஜ வாழ்க்கைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் திரும்பவும் பாடசாலைக்குப் போய்த்தமது படிப்பைத் தொடருவோம் எனக் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். அவர்கள் பல துறைகளிலும் திறமை படைத்தவர்கள். அன்பை, அரவணைப்பை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்த இவர்கள் இங்கு சமூகத்துடன் இணைந்து வாழ்வது ஒரு வரப்பிரசாதமாகும்.

வாழ்வில் நம்பிக்கை நட்பு என்ன எண்பதை அறிந்து தமது வாழ்வை சீர்செய்வதற்கு சந்தர்ப்பம் கிட்டியது கடவுளின் அருளே ஆகும். இவர்களின் நல்வாழ்வுக்கு உதவும் சந்தர்ப்பம் எமக்கு கிட்டியதை நினைத்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். இவர்கள் நல்ல பிரஜைகளாக நாடு போற்றும் பெண்மணிகளாக எதிர்காலத்தில் வர வேண்டுமென சர்வதேச மகளிர் தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போமாக.!

நன்றி. வணக்கம்

## திருமதி தயாநிதி செல்வநாயகத்தின் உரை

இங்கு குழுமியிருக்கும் அனைவருக்கும் வணக்கம்.

இந்த மேடையில் பொலிவுடன் அமர்ந்திருக்கும் பெண்மணிகள் யாவரையும் பார்க்கும் பொழுது மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமிதமாகவும் இருக்கின்றது. இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலும் பிரபல்யமானவர்கள் – பல சாதனைகள் புரிந்துள்ளனர்.

திருமதி. திலகா விஜயரத்தினம்

இன்றைய மகளிர் தின வைபவத்தில் புகழாரம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் திலகா விஜயரத்தினம், இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு ஆகிய இருவரும், நானும் ஆறு வயதாக இருக்கும் பொழுதே சிநேகிதிகளாகிவிட்டோம். நாங்கள் மூவரும் எமது ஆரம்பக்கல்வியை யாழ் இந்துக் கல்லூரியில் பெற்றுக் கொண்டோம். பின்பு 1942இல் யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆரம்பித்த அன்றையதினம், இந்துக் கல்லூரியிலிருந்து, இந்து மகளிர் கல்லூரிக்கு பெண்பிள்ளைகள், வரிசையாக அணிவகுத்து விளையாட்டு மைதானத்தினூடாக அனுப்பிவைக்கப்பட்டனர் – அவர்களில் நாங்கள் மூவரும் அடங்குவோம்.

கொட்டில்களில் வகுப்புக்கள் நடைபெற்றாலும் திறமையான ஆசிரியைகளிடம் ஆர்வத்துடனும், குதூகலத்துடனும் நாம் கல்வி கற்ற நினைவுகள் இன்னமும் பசுமையாக இருக்கின்றன.

திலகா எங்களுடன் வகுப்பு 7 வரையும் படித்துவிட்டு பின்பு வேம்படி மகளிர் கல்லூரிக்குச் சென்றுவிட்டார். S.S.C பரீட்சையை முடித்ததும், மேற்படிப்பை மேற்கொள்வதற்காக, சென்னை சென்று அங்கு Madras Christian College இல் சேர்ந்து விஞ்ஞானப் பட்டதாரியானார்.

நானும் இராஜேஸ்வரியும் S.S.C பரீட்சைக்குத் தோற்றிய பின் இராஜேஸ்வரி சென்னைக்குச் சென்று B.A. பட்டத்தையும் இலங்கை யாழ் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார். நான் S.S.C பரீட்சையில் சித்தியடைந்து – எனது கல்லூரியிலேயே கல்வியைத் தொடர்ந்தேன்.

திலகா ஒரு சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர். 'The spirit of the Palmyra', 'The confessions of a Conscripted Teacher' என்ற நூலினை 2006 இலும் வெளியிட்டார். இந்நூல்களின் விற்பனையில் இருந்து பெறப்படும் பணத்தினை தருமகாரியங்களுக்கும், Kidney Patients Welfare society என்ற நிறுவனத்திற்கும் அன்பளிப்பு செய்துள்ளார். திலகாவின் நாட்டிய நாடகங்கள் சமுக நாடகங்கள் பல மேடையேற்றப்பட்டன.

2007ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24ந் திகதி வீரகேசரி நிருபர் சிந்துஜா திருநாவுக்கரசு பேட்டிகண்டு அவரது இலட்சியம் பற்றி கேள்வி யெழுப்பிய பொழுது அவர் கூறியவற்றை, உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். "முதுமையிலும் எனக்கு இலட்சியம் ஒன்று இருப்பதாயின் அது இறுதிவரை தமிழுக்கும், சமயத்திற்கும், கலைக்கும் என்னால் ஆனதைச் செய்ய வேண்டும் என்பதே. இதுவரை எனக்கு எந்தப்பட்டமோ, விருதோ கிடைக்கவில்லை. அதனை நோக்கி நான் செல்லவுமில்லை, வாழவுமில்லை. என் ஆக்கங்களை மக்கள் வரவேற்றால் அதுவே பெரிய விருதாகக் கருதுவேன்". அவர் பல்லாண்டு நலமுடன் வாழவேண்டும். பல ஆக்கங்களை மக்களுக்கு அளிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

## திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

தமிழில் நல்ல புலமையும் சமயத்தில் ஆழ்ந்த பற்றும் கொண்டவரும், பண்பும், பணிவும் ஒருங்கிணைந்தவருமாகிய இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு, இன்று நாடறிந்த ஒரு ஆன்மிகப் பேச்சாளர். கல்வித்துறையில் தடம்பதித்த ஒரு புகழ் பூத்த அதிபர். வீணை இசைக்கலைஞர்.

தமிழிலும், சைவ சமயத்திலும் பாண்டித்தியம் பெற்ற இவர், நிரம்பிய அறிவும் ஆளுமையும் பெற்ற ஒரு சிறந்த பெண்மணியாகத் திகழ்கின்றார். 1957களில் கல்வித்துறையில் அரசாங்கப் பாடசாலைகளில் இணைந்தவர். தம் ஆளுமைத் திறத்தால், பரீட்சை மூலம் அதிபர் சேவைக்குத் தரமுயர்த்தப்பட்டு முப்பத்தினான்கு ஆண்டுகள் ஆசிரிய, அதிபர் தகைமைகளோடு பணிகளாற்றியவர்.

திருமதி இராஜேஸ்வரி ஆசிரியையாய், தரம்மிக்க அதிபராய், விரிவுரையாளராய் விளங்கிய காலத்தும், தனது மொழியாற்றலால் மிகப்பிரபல்யமான, சமய, ஆன்மிக இலக்கியப் பேச்சாளராக அங்கீகரிக்கப்பட்டார். அழகாக எழுதும் ஆற்றல் அவரின் தனித்துவம். அவரது பன்முக ஆற்றலின் இன்னொருபுறம் அவரின் இசைத்துறையிலுள்ள பாண்டித்யம் – கொழும்பு நகரில் பிரபல்யம் பெறும் வீணைக் கச்சேரிகள், கர்நாடக இசை விழாக்கள் பொது நிகழ்வுகளிலெல்லாம் திருமதி இராஜேஸ்வரியும் அவரது மகள் ராதை குமாரதாஸ் அவர்களினதும் மாணவர் சிறப்புற அளிக்கும் நிகழ்ச்சிகளிலிருந்து புலனாகும்.

தமிழறிவும், சமயப்பற்றும், இசைஞானமும் ஒருங்கே அமையப்பெற்று, அறிவுக்களஞ்சியமாகிய திருமதி இராஜேஸ்வரியை இலங்கை கல்வி கலாச்சார அமைச்சுக்களும், வானொலி, தொலைக்காட்சி சாதனங்களும் அவரது திறமைகளை நன்கு பயன்படுத்திக் கொண்டன.

விவரம் தெரிந்து எழுதத் தொடங்கிய காலந்தொட்டு ஏதாவது சமயக் கருக்களை அழகு தமிழில் எழுத வேண்டும் என்ற அவாவினை "இந்து மதம் விழாக்கள் விரதங்கள்" என்னும் கலைக் களஞ்சியமாகத் திகழும் நூலை ஆவணி மாதம் 2009ஆம் ஆண்டு சைவ உலகிற்கு கையளித்து நிறைவு பெற்றார். அவர் மேன்மேலும் பற்பல சமய நூல்களை எழுதி சமயத்துறை விளங்க, வளர திருத்தொண்டு செய்ய வேண்டும் என எமது மனமார்ந்த நல்லாசிகளை கூறுவோமாக.

நன்றி. வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு, அங்கத்தவர்

# திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கத்தின் உரை

இங்கு வருகைதந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம்.

தமிழன் என்றொரு இனம் உண்டு.
தனியே அதற்கொரு குணம் உண்டு.

ஆம் இந்தப் பாடல் யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் எல்லோருக்கும் நன்கு பொருந்தும்.

மேடையில் வீற்றிருக்கும் கௌரவிக்கப்பட்டவர்கள், தலைவி, பேச்சாளர்கள் எல்லோருமே பாடசாலையில் படிக்கும் காலத்தில் பலவற்றிலும் பெயர், புகழ் பெற்றவர்கள். இவற்றில் பிரதம அதிதி சந்திராவை நான் லண்டன் சென்ற போது பார்த்தேன். இவர் அங்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் (லண்டன்) மூலம் பெரும் உதவி செய்து வருகின்றவர். நண்பர்களுக்கு முதல் இடம், பாசமாய் நடக்கின்றவர்.

எங்கள் சற்சொரூபவதி நாதன் அவரைப்பற்றி யாருக்குத் தெரியாது? சகலகலாவித்தகி. படிக்கும் காலத்தில் ஒருவருடனும் பேசமாட்டார். தனது பாடங்களில் மிகவும் கடுமையாக படிப்பார். 100 புள்ளிகள் எடுக்கவும் 1ஆம் பிள்ளையாய்வரவும் ஒரு போதும் தவறமாட்டார்.

இவர்களில் யாரைப் பற்றித்தான் பேசுவது. பலவற்றாலும் திறமை வாய்ந்தவர்கள். ஆதலால்தானே மேடையில் வைத்துப் பேசுகிறோம். திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் பொதுவாகவே நாம் நினைக்க முடியாத அளவு, பொதுத் தொண்டு, அனாதை இல்லம் இவற்றிற் கெல்லாம் உதவி செய்யும் ஓர் பார் புகழும் சிறந்த பெண்மணி.

திருமதி திலகா விஜயரத்தினம் அவர்கள் ஒரு சிறந்த கல்விமானும், ஆசிரியையும், எழுத்தாளருமாவார்.

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் ஆசிரியராகவும், அதிபராகவும், விரிவுரையாளராகவும், எழுத்தாளராகவும், வீணை இசைக் கலைஞராகவும் விளங்கும் அறிவுக்களஞ்சியமாவார்.

ஒவ்வொருவருடைய புகழ் பற்றியும் பேசலாம், நேரம் நெருங்கிவிட்டது. என் பேச்சை முடிக்கிறேன்.

நமஸ்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி திலகா விஜயரத்தினம் அவர்களின்

# ஏற்புரை

எனது மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய தலைவி அவர்களே, பிரதம அதிதி திருமதி பரமேஸ்வரன் அவர்களே, யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க (கொழும்பு) உறுப்பினரே, திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களே, திருமதி அன்னலட்சுமி ராஜதுரை அவர்களே, சைவமங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி கஜேந்திர தாஸ் அவர்களே, ராமநாதன் பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராஜா அவர்களே, இங்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் என்ன விழா நடத்தினாலும் தவறாமல் சமூகம் தரும் திரு கயிலாசபிள்ளை அவர்களே, திரு அம்பலவாணர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கம் உரித்தாகுக.

நான் மாலை தீவிலிருந்து 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இங்கு வந்தேன். இந்த 21 வருடங்களாக எந்த ஒரு யாழ்ப்பாண பாடசாலையின் பழைய மாணவர் சங்கமும் இது வரை தமது பழைய மாணவரை இவ்வாறு கௌரவித்ததில்லை. இப்பெருமை யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் (கொழும்பு) சங்கத்தினருக்கே உரியது. அவர்களை நாம் கைதட்டிப் பாராட்டுவோம். (பலத்த கைதட்டல்)

இதோ இருக்கிறாரே கோகிலா மகேந்திரன் அவர்கள், மனோதத்துவரீதியான அவருடைய கட்டுரைகளை யாவரும் படித்துப் பயன் பெற்றிருப்பீர்கள். திருமதி அன்னலட்சுமி ராஜதுரை கவிஞர் வாலியையும் மிஞ்சும் அவரது கவிதை அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி பற்றியது – அதை நீங்கள் யாவரும் வாரா வாரம் ஞாயிறு வீரகேசரியிற் பார்த்து ரசித்திருப்பிர்கள். இலக்கண சுத்தியும் இலக்கியச் சுவையும் கொண்ட கவிதை அது. திருமதி ராஜேஸ்வரியின் பாரம்பரியமே எழுத்தாளர் பரம்பரையே. இவர்களோடு என்னையும் சரியாசனத்திலில்லாவிட்டாலும், சரிசமமான ஆசனத்திலிருத்திக் கௌரவித்தமைக்கு, யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்களுக்கு என் மானமார்ந்த நன்றிகள்.

இன்று இந்த பிரபல எழுத்தாளர்களோடு என்னையும் ஒரு பிரபல எழுத்தாளர் என்று கௌரவித்துள்ளார்கள். நான் அறிந்த அளவுக்கு எனக்கு பிரபல்யம் இல்லை. அவர்கள் என்மீது வைத்த அன்பின் நிமித்தம் இவ்வாறு என்னை அளவுக்கு மிஞ்சிப் புகழ்ந்து விட்டார்கள். தாயகத் தமிழில் சொல்வதானால் சற்று "ஓவராய்" சொல்லிவிட்டார்கள். அதற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

நன்றி வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்ல வேண்டும் நல்லவர்க்கே - - ஏற்புரை

யாழ். இந்து மகளிர் கல்லூரி, பழைய மாணவர் சங்கம் - கொழும்பு - இவர்களை - நல்லவர்கள் - என்று பெருமையுடன் கூறுகின்றேன், காரணம் - இவர்கள் நல்லவர்கள் - மாத்திரமல்ல - வல்லவர்களும் கூட. என்னை "சிறந்த பெண்மணி" என்ற விருது வழங்கிக் கௌரவித்தமைக்காக மட்டும் நான் இவர்களை நல்லவர்கள் என்று கூறிவிடவில்லை, தாய் எனும் விருட்சத்தின் பெரும் விழுதாக நின்று, காலம் காலமாக தலைநகரிலே இத்தாயின் பெருமையை, ஆற்றலை, யாவரும் அறிந்திடச் செய்து, அத்தாயின் வளர்ச்சிக்காக, சந்தர்ப்பத்திற் கேற்றவாறு பணிபுரியும் இச்சங்க அங்கத்தவர்கள் அனைவரினதும் உயர் நோக்கம், தெளிந்த சிந்தனை, செயல் வேகம், விவேகம், செயற்றிறன் ஆகியவற்றிற்காகவே, இவர்களை "நல்லவர்கள்", "வல்லவர்கள்" என்கின்றேன்.

2010ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 17ஆம் நாள் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மேற்படி சங்கத்தினரால் வெகுசிறப்பாக நடாத்தப் பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் இவ்விருது வழங்கும் வைபவம், மிக ரம்மியமாக, நட்புறவோடு, பசுமை நிறைந்த பள்ளிக் கூட நாட்களின் நிகழ்வுகளை, பசுமையாக, மீண்டும் மனத்திரையில் ஓடவைத்த, இனிய பேச்சுக்களோடும், கலகலப்பான உரையாடல்களோடும், சுவையான சிற்றுண்டிகளோடும் இடம் பெற்று, சபையில் அமர்ந்திருந்த அனைத்துச் சகோதரிகட்கும், மூன்று மணி நேரத்துள், பரவசத்தையும் இளமையையும் வழங்கியது என்றால் மிகையாகாது. இத்தனைக்கும், காரணமாகஅமைந்த மேற்படி சங்கத்தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், செயலாளர் திருமதி கௌரி ரமணா மற்றும் இவ்விழாவின் வெற்றிக்கு முன்னின்று ஒத்துழைத்த அனைத்து சகோதரிகளுக்கும் எனது மனம் நிறைந்த உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேற்படி சங்கம் மேன் மேலும் வளர்ச்சியுற எல்லாம் வல்லவனை வேண்டி நிற்கும்

கலாபூசணம் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு
முன்னாள் அதிபர் - யாழ். நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலயம்
பழைய மாணவி யாழ்/ இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."
**"It ought to be beautiful, I live here."**

யாழ் இந்து மகளிர் கல்லூரி ப.மா.ச. கொழும்பு
**Jaffna Hindu Ladies College O.G.A. Colombo**

## சிறந்த எழுத்தாளர் விருது - 2010

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவியும், ஆங்கில மொழித் திறனும் தமிழ் மொழி ஆற்றலும் கொண்டு ஆங்கில பத்திரிகைகளில் இந்து சமய விளக்கங்களையும், யாழ் மண்ணின் சிறப்பையும் வெளிக் கொண்டு வருபவரும், நூல் ஆசிரியராகவும், அறிவு பூர்வமான மாணவ உலகை உருவாக்கும் ஆசிரியப் பணியில் அருந்தொண்டாற்றியவருமான

## திருமதி திலகா விஜயரத்தினம்

அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக **இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு பங்குனித் திங்கள் பதினேழாம் திகதி** (17.03.2010) கொழும்பு 4 பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் சர்வதேச மகளிர் விழாவாகிய இன்று

## "சிறந்த பெண்மணி"

என்று எமது சங்கம் இச்சான்றிதழை வழங்கி கௌரவிக்கின்றது.

Sthahan
.................................
செல்வி சற்சொரூபவதி நாதன்
தலைவி

.................................
திருமதி கௌரி ரமணா
கௌரவ செயலாளர்

**17. 03. 2010**

| President | Secretary | Treasurer |
|---|---|---|
| Miss. Satsorupawathy Nathan | Mrs. Gowri Ramana | Miss. Sivamalar Subramaniam |
| 112 3/1, Galle Road | 15, Madangahawatta Lane | 24, Deal Place A |
| Colombo 4 | Colombo 6 | Colombo 3 |
| Tel: 2580215 | Tel: 2360228 | Tel: 2575566 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."
**"It ought to be beautiful, I live here."**

யாழ் இந்து மகளிர் கல்லூரி ப.மா.ச. கொழும்பு
**Jaffna Hindu Ladies College O.G.A. Colombo**

## பன்முக ஆற்றல் விருது - 2010

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் புகழ் பூத்த பழைய சிரேஷ்ட மாணவியும், முதுமாணிப் பட்டம் பெற்றவரும், தமிழிலும் சைவ சமயத்திலும் பாண்டித்தியமும் பெற்று, ஆசிரியராகவும், அதிபராகவும், விரிவுரையாளராகவும் விளங்கியதோடு, சமயச் சொற்பொழிவாளராகவும், சிறந்த நூல் ஆசிரியராகவும், வீணை இசைக் கலைஞராகவும் திகழுகின்ற

## திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக **இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு பங்குனித் திங்கள் பதினேழாம் திகதி (17.03.2010)** கொழும்பு 4 பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் சர்வதேச மகளிர் விழாவாகிய இன்று

## "சிறந்த பெண்மணி"

என்று எமது சங்கம் இச்சான்றிதழை வழங்கி கௌரவிக்கின்றது.

செல்வி சற்சொருபவதி நாதன்
தலைவி

திருமதி ~~கௌரி ரமணா~~
கௌரவ செயலாளர்

**17. 03. 2010**

President
Miss. Satsorupawathy Nathan
112 3/1, Galle Road
Colombo 4
Tel: 2580215

Secretary
Mrs. Gowri Ramana
15, Madangahawatta Lane
Colombo 6
Tel: 2360228

Treasurer
Miss. Sivamalar Subramaniam
24, Deal Place A
Colombo 3
Tel: 2575566

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் (பட்டினம் சிவன் கோயில்)

தர்மத்துவீபமாம் இலங்கை மணித்தீவின் சிரம் எனப் பொலிவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்துக்குக் கண்ணாக அமைந்து புகழ் சேர்த்தது வண்ணையம்பதி. கி.பி 1790ம் ஆண்டு வைத்தியலிங்கம் செட்டியாரால் வண்ணார்பண்ணையிலே இந்த ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

கோபாலச் செட்டியாருக்கு அருமை மகனாக வைத்தியலிங்கம் செட்டியார் பிறந்தார். கருவிலே திருவுடையவர். அக்காலத்து யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஒல்லாந்த தேசாதிபதியும் அவர் மனைவியும் குழந்தையில்லாக் குறையைப் போக்க, பேரழகு வாய்ந்த வைத்தியலிங்கம் செட்டியாரைத் தத்த் புத்திரனாகப் பெற்றோர் அனுமதியுடன் அன்புடன் வளர்த்தனர்.

வைத்தியலிங்கச் செட்டியார் வளர்ந்து வாலிபனானதும் வளர்ப்புத் தந்தையாகிய மகா தேசாதிபதியினது அனுசரனையுடன் மன்னாரில் முத்துக் குளிக்கும் குத்தகையை ஏலத்திற் பெற்றுப் பெருஞ் செல்வந்தரானார். ஒல்லாந்தர் ஆட்சி முடிந்து தேசாதிபதியும் மனைவியும் நாடு திரும்புமுன் வைத்தியலிங்கச் செட்டியார் சிவன் கோயில் கட்டுவதற்கு அனுமதி பெற்றுக்கொண்டார். இறைவன் கனவிலே கட்டளையிட்டபடி வண்ணார்பண்ணையிற் கோயில் கட்டத் தீர்மானித்தார். புள்ளிருக்கு வேளூர் வைத்தீஸ்வரன் கோயிலைப் போலவே தானும் ஒரு கோயில் கட்டத் தொடங்கினார்.

எதிராளிகளது சூழ்ச்சியினாலே வைத்தியலிங்கம் செட்டியாருடைய நண்பர் பனங்காமம் பிரதானியாகவிருந்த நல்ல மாப்பாண வன்னியார் சிறை வைக்கப்பட்டார். வைத்தியலிங்கச் செட்டியார் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் கட்டிக் கொண்டிருக்கும் போதே கொழும்பு சென்று அரசினருக்கு 12,000 டொலர் பணம் கட்டி நண்பனைச் சிறை மீட்டு வந்த நன்றிக் கடனை ஈடு செய்யுமுகமாக, நல்ல மாப்பாண வன்னியர் தனது காணியிலிருந்து 20,000 பனை மரங்களை வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் கட்டுவதற்குக் கொடுத்துதவியதுடன் ஆலயத்தின் துணுக்காயிலுள்ள தரங்கண்டல் என்னுங் கிராமத்தையே சிவன் கோயில் நித்திய பூசைச் செலவுக்குத் தானமாகக் கொடுத்தார்.

புள்ளிருக்கு வேளூரைப் போலவே மூலமூர்த்திக்கு வைத்தீஸ்வரன் என்றும் அம்பாளுக்குத் தையல்நாயகி என்றும், தீர்த்தத்திற்குச் சித்தாமிர்தபுட்கரணி என்றும் பெயரிட்டு இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பாசாரிகளினாலே ஆகம முறைப்படி அமைக்கப் பெற்ற சிவாலயமாக விளங்குகின்றது வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம். அம்பாளுக்கு ஸ்ரீ பாலாம்பிகா தேவி என்னும் ஒரு நாமமும் உண்டு. தலவிருட்சம் வன்னி மரம் ஆகும்.

பங்குனி உத்தர நாளன்று தீர்த்தத்துடன் முடிவடையுமாறு இருபத்தொரு நாள் சிவன் திருவிழாவும் ஆடிப் பூரத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடையுமாறு அம்பாள் உற்சவமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணப் பட்டினத்தில் பஞ்சரதங்களில் பஞ்ச மூர்த்திகளும் தேர்த்திருவிழாவன்று வீதிகளில் பவனிவரும் காட்சி பன்னெடுங்காலமாக இடம்பெற்று வருகிறது. தினமும் ஆறு காலப் பூசை உண்டு. நித்திய நைமித்திய வழிபாடுகள் தென்னகத்து வைத்தீஸ்வரன் கோவில் முறைகளை அனுசரித்து கிரமமாக நடைபெற்று வருகின்றன. நவராத்திரி, திருவெம்பாவை முதலான விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆகம முறைப்படி அமைக்கப் பெற்ற சிவாலயம் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் என்பதனாலே நல்லைநகர் ஆறுமுகநாவலர் நாள்தோறும் சென்று வழிபாடியற்றிக் கதாப்பிரசங்கம் செய்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நாவலருக்குப் பின் அவர் மருகர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை புராணப் பிரசங்கங்களை அங்கேயே செய்து வந்தார். பின் சங்கர சுப்பையரும், கொக்குவில் சைவப்புலவர் குமாரசுவாமிப்பிள்ளையும், நல்லை ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்களும் திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களும் பிரசங்கம் பஜனை கூட்டுப் பிரார்த்தனை ஆகியவற்றை நிகழ்த்தி வண்ணை வைத்தீஸ்வரன் பேரருள் பெற்றனர்.

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்குத் தமிழ் நாட்டிலிருந்து அந்நாளில் தருவிக்கப்பட்ட அர்ச்சகர்கள் சிவாகம விற்பன்னர்களாக இருந்தார்களெனவும், இந்நாட்டில் வேதாத்தியனமும், சிவாகம ஞானமும் பரவுவதற்கு அவர்களே காரணர்களாக இருந்தார்கள் எனவும் கூறப்படுகின்றது.

நால்வர் உட்பட பிரதான மூர்த்திகள் அனைவரும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். இராஜ கோபுரமும் நிருமாணிக்கப்பட்டு 1970ம் ஆண்டு சித்திரைத் திங்கள் வளர்பிறைப் புனர்பூச நாளிலே மகா கும்பாபிஷேகத்துடன் வைத்தீஸ்வரப் பெருமாள் அடியார்களுக்கு இன்னருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

*தொகுப்பு*
*திருமதி. விமலா மணிவாசகன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நாட்டு வைத்தியம்

இவ்வுலகில் உயிர் வாழ்க்கை தொடங்கியதிலிருந்து உயிரினங்கள், தமக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு, சுற்றுச் சூழலில் உள்ள இயற்கை மூலப் பொருட்களை உபயோகிக்கும் உள்ளுணர்வைப் பெற்றிருந்தன.

மனிதரும் நோயை தடுத்துக் கொள்வதற்கு, ஏற்பட்ட நோயை குணப்படுத்துவதற்கு, இயற்கையை உபயோகிக்கப் பழகிக் கொண்டனர். இன்று காணப்படும் வெவ்வேறான சிகிச்சை முறைகள் இப்பழக்கங்களின் அடிப்படையில் உருவானவையே.

உலகின் வெவ்வேறு மக்கட் கூட்டம், தங்கள் சுற்றுச் சூழலில் உள்ள இயற்கை மூலப் பொருட்களை உபயோகித்து நோயை குணப்படுத்தவும், நோயணுகாது வாழவும் பழகிக் கொண்டனர்.

இவ்வாறு தோற்றம் பெற்ற பல்வேறு வைத்திய முறைகள் இன்று எங்கள் நாட்டிலும் கையாளப்பட்டு வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

அவையாவன:

ஆயுர்வேதம், சித்த, யுனானி, பாரம்பரிய மருத்துவம், அக்குபஞ்சர், ஹோமியோபதி, மேற்கத்தைய மருத்துவம் என்பன.

இவற்றில் பாரம்பரிய வைத்திய முறையும் ஆயுர்வேதம், சித்த, யுனானி முறைகள் எம் நாட்டு வைத்தியம் என்று கருதப்படுகின்றன.

## பாரம்பரிய வைத்திய முறை

இன்று இலங்கையில் காணப்படும் பாரம்பரிய வைத்திய முறையானது உலகில் நம் நாட்டுக்கே உரித்தான சிகிச்சை முறைகளையும் மருந்து, மூலிகைப் பிரயோகங்களையும் கொண்டதாகவும் ஒவ்வோர் பரம்பரைக்கும் உரித்தான சிறப்பம்சங்களைக் கொண்டு அவ்வப் பரம்பரையினரின் வழித்தோன்றல்களால் வாய்வழியாகவும், குருசிஷ்ய வழக்கத்திலும் பரப்பப்பட்டு இன்று வழக்கொழிந்து அருகிவரும்நிலையில் காணப்படுவதாகவும் உள்ளது.

ஆயினும் பாரம்பரிய வைத்திய முறைகளின் சிறப்பும் வழக்கும் எம்கலை கலாச்சார வைத்திய வரலாற்றுப் பின்னணிகளினூடாக அறியப்பட வேண்டியவையும் எம் நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கும் நிலைப்பாட்டுக்கும் உறுதியளிக்கக் கூடியது என்பதும் சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபக்தனான இலங்கை வேந்தன் இராவணன் சிறந்த வைத்தியன் என்பது வரலாற்றுக் குறிப்புகளில் கூறப்பட்டுள்ளதை குறிப்பிடப்பட வேண்டியதே.

'கிரந்தி எண்ணை' பாலர்களுக்கு பிரயோகித்தல் வேறு எந்த நாட்டிலும் பிரயோகிக்கப்படாத வைத்திய முறை என்பதும் 'இரத்தக்கல்க' உபயோகமும் இந்நாட்டிற்கு உரியது என்பதும் குறிப்படப்பட வேண்டியவையே.

பாரம்பரிய மருத்துவம் என்பதும் விஷேடமாக எமது நாட்டுக்கே உரித்தான மூலிகைகளையும் மூலப்பொருட்களையும் உபயோகித்து செய்யப்படும் மருத்துவம்

அதே போன்று சிறப்பான நோயணுகாவிதிகளையும் உள்ளடக்கியுள்ளது. முறிவு நெரிவு, பாம்புக்கடிவைத்தியம், விஷவைத்தியம், கண்வைத்தியம், கட்டிகள், சோகை, காமாலை, பாலர் வைத்தியம், மனநோய் வைத்தியம் என்பவை எமது நாட்டுக்கேயுரிய சிறப்பான வைத்திய கையாட்சிகளை கொண்டவையாகும்.

எம் நாட்டு மக்கள் தமக்கு வரும் நோய்களை குணப்படுத்துவதில் காட்டும் விஷேட தன்மையை அவதானித்த 'றொபோட் ஹொக்' என்னும் ஆங்கிலேயர் "ஒவ்வொரு இலங்கையரும் ஒவ்வோர் மருத்துவர்" எனக் கூறியுள்ளார்.

இந்நாட்டில் ஆயுர்வேதம், சித்த, யுனானி, வைத்திய முறைகளும், பாரம்பரிய வைத்திய முறைகளும், இந்நாட்டு வரலாற்று, சமூக பின்னணியின் காரணமாக, இந்நாட்டுக்கேயுரித்தான சுதேச வைத்தியமாக கருதப்பட்டும் கையாளப்பட்டும் வருவதுடன், ஒரேவைத்தியக் கல்லூரியில் போதிக்கப்பட்டும் வருவதனால், ஒன்றுடன் ஒன்று மிகவும் நெருங்கிய அளவிலும் கலந்தும் பிரயோகிக்கப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

## ஆயுர்வேத வைத்திய முறை

சிந்துவெளி நாகரீக வட இந்திய கலாச்சார பின்னணியில் சமஸ்கிருத மூல நூல்களைக் கொண்ட மருத்துவ முறையான போதும் சிவனே இம்மருத்துவ முறையை உலக மாந்தர் நன்மைக்காக முதன் முதலில் எடுத்துக் கூறியதாக புராணங்கள் கூறுகின்றன.

இலங்கையில் பாரத நாட்டு அரசியற் செல்வாக்கினாலும், கலை கலாச்சார தொடர்புகளாலும், பௌத்த சமயத் தொடர்பாலும், நம்நாட்டில் தொன்று தொட்டு கையாளப்பட்டு ஆதரிக்கப்பட்டு இன்று மிகவும் உயர்ந்த ஸ்தானத்திலும் உலக மக்களின் கவனத்தை இலங்கை மீது ஈர்க்கும் ஓர் முக்கிய துறையாகவும் பரிணமித்து சுதேச வைத்திய துறையில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

இன்று இலங்கையில் ஆயுர்வேதம் என்ற சொல் ஆயுர்வேதம், சித்த, யுனானி, பாரம்பரிய வைத்திய முறைகள் யாவற்றையும் குறிக்கும் சொல்லாக சட்டரீதியான அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்த வைத்தியம்

சித்த வைத்திய முறையானது தமிழ் மருத்துவம் என்றும் குறிப்பிடப்படக் கூடியது. இவ்வைத்திய மூலநூல்கள் தமிழில் காணப்படுவதும் தமிழர் நாகரீகம், மொழி, சமூக சூழல்களுக்கும், தமிழர் வாழ்ந்த பிரதேச, கால, சூழல் மாற்றங்களுக்கேற்பவும் கூறப்பட்ட வைத்திய முறையாகக் காணப்படுகிறது.

இவ்வைத்திய முறையானது சித்தத்தை சிவன்பால் செலுத்தி மூன்று காலங்களையும் உணர்ந்து காயசித்தி, ஞானசித்தி பெற்ற சித்தர்களால் கூறப்பட்ட மருதத்துவமாகையால் சித்த மருத்துவம் என்று வழங்கப்படுகிறது.

வாதம் (இரசவாதம்), வைத்தியம், யோகம், ஞானம் என்று நான்கு பிரிவுகளையும் தெளிவாகக் கூறியதுமான மருத்துவ முறையாக காணப்பட்ட போதும் அகத்திய மாமுனிவரின் பங்களிப்பை முக்கியமாக இம் மருத்துவத்துறையில் குறிப்பிடப்படுகிறது.

## யுனானி வைத்தியம்

வணிகத்திற்காக ஈழத்துக்கு வந்த அராபியர்களாலும் முகலாய ஆட்சியாளர்களது ஆக்கிரமிப்பாலும், இலங்கைக்கு இவ்வைத்திய முறையானது கொண்டுவரப்பட்டு, உள்நாட்டவர்களால் கையாளப்பட்ட வைத்திய முறையாகும். மூலநூல்கள் அநேகமானவை உருது மொழியில் காணப்பட்ட போதும் இந்தியா இலங்கையில் அதிகளவான தமிழ், முஸ்லீம் இனத்தவர்களால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது.

இது கிரேக்க நாகரீக பின்னணியையும் அரேபிய அயோனிய கலாச்சாரத்திலும் தோன்றி உருவாகி மத்தியகால சரித்திரத்தில் அதிகம் பிரசித்தி பெற்றிருந்த வைத்திய முறையாகும்.

இது இந்தியா, அரேபியா, மத்திய தரைக்கடற் பிரதேசங்களில் பரவியிருந்தது. இதுவும் இயற்கையான மூலப்பொருள்களிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகளைக் கொண்ட மருத்துவ முறையாகும்.

## அலோபதி வைத்திய முறை

அலோபதி என்னும் மேல்நாட்டு மருத்துவ முறையானது நவீனவிஞ்ஞான கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் உருவாகி, மேற்குலக ஆக்கிரமிப்பின் விளைவாக எம்நாட்டுக்கு அறிமுகமாகி, இன்று தேசிய சுகாதாரத்தில் முக்கிய பங்கை வகித்து வருகிறது. அலோபதி . வைத்தியத்தின் தந்தையாக ஹிப்போகிரடிஸ் (Hippocrates) கருதப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச அநுசரனை, நவீன தொழில் நுட்பவளர்ச்சி, புதிய புதிய கண்டுபிடிப்புகள், மருந்துற்பத்திக் கம்பனிகளின் பிரச்சாரம் இவற்றினால் இன்று மக்கள் வாழ்க்கையில் அத்தியாவசிய மருத்துவத்துறையாக காணப்படுகிறது.

இருந்தும் நம்நாட்டு மக்களின் ஆரோக்கியச் சவால்களுக்கு தனித்து முகம் கொடுக்கக் கூடிய வல்லமை படைத்ததா? என்பதை சிந்திக்கவே வேண்டியுள்ளது.

ஆக்கம்
வைத்திய கலாநிதி எ.எ. றிஸ்வானா

2008ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10ம் திகதி லயன் கழகத்துடன் இணைந்து இலவச மருத்துவ சட்ட முகாமும் மலிவு விற்பனையும் நடாத்தப்பட்டது. அப்பொழுது சித்தவைத்தியர் டாக்டர் திருமதி விக்கினேஸ்வரி செல்வநாதன் அவர்களால் விநியோகிக்கப்பட்ட தகவல்கள்.

# கல்லூரியின் சிறந்த மாணவிகள்

2001 செல்வி காயத்திரி சிற்சபேசன்

2002 செல்வி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன்

2003 செல்வி நிலக்ஷி மகாதேவா

2004 செல்வி துளசி கந்தசாமி

2005 செல்வி பாமினி பரஞ்சோதி

2006 செல்வி கபிலினி அரட்செல்வன்

2007 செல்வி கோபிகா குலசிங்கம்

2008 செல்வி மோகனரஞ்சனி ரவீந்திரன்

2009 செல்வி செல்வலச்சுமி செல்வராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்குச் சில

- மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளும் அல்ல.
- எந்தக் காரியமாக இருந்தாலும் சரி ஆரம்பத்தில் கஸ்டம் நடுவில் எளிது; முடிவில் இன்பம்.
- கோபம் வாயைத் திறக்கும், கண்களை மூடிவிடும்.
- அதிஸ்டக்காரன் வீட்டில், சேவல் கூட முட்டையிடும்.
- மாறுதல் கண்டவுடன் மாறும் அன்பு அன்பாகாது.
- நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது.
- எவ்விதம் இறந்தான் என்பது கேள்வியன்று; எவ்விதம் வாழ்ந்தான் என்பது தான் கேள்வி.
- வீழ்வது வெட்கமல்ல, வீழ்ந்து கிடப்பது வெட்ககரமானது.
- கவலைப்படாதீர்கள் கவலையினால் எந்த ஒரு நன்மையும் கிடையாது.
- என்றென்றும் கடவுளையே திடமாக நம்புங்கள்.
- இறந்த காலத்தைப் பற்றிப் புலம்பாதே, எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தி
- விடியலைக் காண வேண்டுமென்றால் வாழ்க்கையோடு போராடு.
- புதுமை செய் அல்லது புரட்சி செய்.
- வெற்றி நிச்சயம் அதனால் நாளை நமதே.

நன்றி – தியாக தீபம்

தந்தவர் – திருமதி. சாரதா மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு.
# பதினேழாம் ஆண்டு அறிக்கை (2010)

(21.02.2010 தொடக்கம் 06.02.2011 வரையும்)

சங்கத்தின் 16வது பொதுக் கூட்டம் 2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ம் திகதி கொழும்பு 4ல் லொரன்ஸ் வீதியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் தலைவி சற்சொரூபவதி நாதன் தலைமையில் நடைபெற்றது.

பதினேழாம் ஆண்டு செயற்குழு அங்கககத்தவர்கள் பின் வருமாறு:-

| | |
|---|---|
| போசகர் | திருமதி உமாராணி குமாரசுவாமி<br>திருமதி சரஸ்வதி ஜெயராஜ் |
| தலைவி | செல்வி சற்சொரூபவதி நாதன் |
| உப தலைவிகள் | திருமதி அபிராமி கயிலாசபிள்ளை<br>திருமதி தயாநிதி செல்வநாயகம்<br>திருமதி தற்பராதேவி தில்லைநாதன் |
| பொதுச் செயலாளர் | திருமதி கௌரி ரமணா |
| உதவிச் செயலாளர்கள் | திருமதி விமலா மணிவாசகன்<br>திருமதி சீறிமகள் ஜீவரட்ணம் |
| பொருளாளர் | செல்வி சிவமலர் சுப்பிரமணியம் |
| உதவிப் பொருளாளர் | திருமதி சர்வேஸ்வரி சிதம்பரநாதன் |
| நிர்வாகக்குழு | திருமதி பொன்மலர் கந்தசாமி<br>திருமதி ருக்குமணி அரசரத்தினம்<br>திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன்<br>திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்<br>திருமதி கலைச்செல்வி நிரஞ்சன்<br>திருமதி நந்தினி மோகன்<br>திருமதி சாவித்திரி உமா மகேஸ்வரன்<br>திருமதி மல்லிகாதேவி சரவணபவன்<br>திருமதி இந்திராணி சோமசுந்தரம்<br>திருமதி கௌரி தேவசேனாதிபதி<br>திருமதி திலகா விஜயரத்தினம்<br>திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்<br>திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா<br>திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம்<br>திருமதி தயாநிதி ஸ்ரீஸ்கந்தராஜா<br>திருமதி மனோன்மணி அருணாசலம்<br>திருமதி மகேஸ்வரி கணேசமூர்த்தி<br>திருமதி புஸ்பகாந்தி சோதிலிங்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குப் பரிசோதகர்: கணேசலிங்கம் அன்ட் கொம்பனி, சாட்டேட் அக்கவுண்டன்ஸ், (Chartered Accountants) 16B Schofield Place, கொழும்பு 3.

யாழ் நாதம் ஆசிரியை: திருமதி விமலா மணிவாசகன்

இவ் வருடத்தின் முக்கிய நிகழ்வுகள்:-

சர்வதேச மகளிர் தினம்:
மகளிர் தினக் கொண்டாட்டம் 2010 மார்ச் மாதம் 21ம் திகதி சரஸ்வதி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இதற்கு திருமதி சந்திரா பரமேஸ்வரன் பிரதம அதிதியாக வருகை தந்தார். திருமதி ராஜேஸ்வரி ஜெகானந்தகுரு திருமதி திலகா விஜயரட்னம் ஆகியோர் சிறப்புப் பெண்மணிகளாக கௌரவிக்கப்பட்டார்கள். அத்துடன் யாழ் நாதம் இதழ் 16 வெளியிடப்பட்டது. (படம் முன் பின், உள் அட்டையில்)

எமது ஒன்றுகூடல் 2010 ஒக்டோபர் மாதம் 17ம் திகதி 14, உருத்திரா மாவத்தையில் உள்ள சென்னை உணவகத்தில் நடைபெற்றது. எமது சங்க அங்கத்தவர்கள் பெரும் அளவில் வருகை தந்து சிறப்பித்தார்கள். (படம் பின், உள் அட்டையில்)

2010 ஒக்டோபா 31ம் திகதி மலிவு விற்பனை 75, லொரன்ஸ் வீதியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. திருமதி. கதிர்காமநாதன் ஆகியோர் பிரதம அதிதியாக வருகை தந்தார்கள். இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இதன் மூலம் ரூபா 50,000/- சங்கத்துக்கு கிடைக்கப்பெற்றது. (படம் பின், அட்டையில்)

சங்கத்தின் நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்கள்:- மொத்தம் 6. செயற்குழுக் கூட்டங்கள் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

எங்கள் கல்லூரியின் 2009ஆம் ஆண்டுச் சிறந்த மாணவியான செல்வி செல்வலக்சுமி செல்வராஜனுக்கு எமது சங்கத்தினால் வருடம் தோறும் வழங்கப்படும் ரூபா 31,000/- பெறுமதியான பொன்விருது வழங்கப்பட்டது. (படம் பின் அட்டையில்)

எங்கள் சங்கம் ஸ்தாபித்த இணையத்தளம் (விபரம் பக்கம் 7)

யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி:-
எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பில் உள்ள ரூபா 5,00,000/-த்தில் வரும் வட்டிப்பணத்தில் திறமையான, வசதி குறைந்த 10 மாணவர்களுக்கு மாதந் தோறும் தலா ரூபா 500/- வழங்கப்பட்டு வருகின்றது. அதிபர் உறுதிப்படுத்தி மாணவிகளின் கையொப்பத்துடன் கடிதம் சங்கத்துக்கு அனுப்பியுள்ளார். அவர்களின் பெயர்கள் கீழே உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| லஜிதா தவராஜா | 12Bio | யுவரேகா துஸ்யந்தன் | 9E |
| மயூரதி குகனேஸ்வரன் | 11C | பவித்திரா விக்ரர்விஜயநாதன் | 9F |
| வான்மதி நாகலிங்கம் | 8B | பவானி குகதாசன் | 8C |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பிரசாந்தி மதியரசு | 8D | தர்சிகா பாலேந்திரன் | 8E |
| மேரிமேனகா நாகராஜா | 7C | தட்சிகா பாஸ்கரன் | 7D |

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி:-
எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பில் உள்ள ரூபா 1,00,000/-த்தில் வரும் வட்டிப்பணத்தில் திறமையான, வசதி குறைந்த 3 மாணவர்களுக்கு வருடம் தோறும் தலா ரூபா 4000/- வழங்கப்பட்டு வருகின்றது. அதனை அவர்களின் வயதை கருத்தில் கொண்டு அதிபர் திருமதி T.A துரைசிங்கம் ஹற்றன் நஷனல் வங்கியில் கணக்கு திறந்து வைப்புச் செய்துள்ளார். இதனை உறுதிப்படுத்தி மாணவிகளின் கையொப்பத்துடன் 2010.12.06 திகதி இடப்பட்ட கடிதம் எங்கள் சங்கத்திற்கு அனுப்பி உள்ளார். அவர்களின் பெயர்கள் கீழே உள்ளன.

| | |
|---|---|
| செல்வி. கஜீனா மஞ்சீவன் | 3A |
| செல்வி. பிரியங்கா துரைசிங்கம் | 2C |
| செல்வி. கார்த்திகாயினி குணசேகரம் | 4C |

சங்க அங்கத்துவம்
எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தில் (வ.கீ.பி.பா.ப.மா.சம்) ஒரு அங்கத்துவ சங்கமாக தொடர்ந்தும் இருக்கிறது.

எமது சங்கத்துக்கு நிதி திரட்டுவதற்தாக, யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் பங்கு பற்றும் நாட்டிய நாடகம், நாடகம் ஆகியவற்றை மேடையேற்றுவதற்கான ஏற்பாடுகள் கல்லூரியுடன் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எமது சங்கக் கூட்டங்களையும் ஏனைய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியா விருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை செய்து தரும் திரு. சச்சிதானந்தனுக்கும் இதை ஒழுங்கு செய்து தந்த திருமதி. பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சங்க அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், உபதலைவிகளுக்கும், பொருளாளர் செல்வி சிவமலர் சுப்பிரமணியம், நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் சங்கமும் கல்லூரியும் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் முன்னேற கல்லூரி வளாகத்திலுள்ள நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் அருள்பாலிப்பாராக.

*திருமதி கௌரி ரமணா*
*கௌரவ செயலாளர்*
*06.02.2011*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச மகளிர்தின தொடர்ச்சி

10-10-2010 அன்று நடை பெற்ற ஒன்று கூடல் நிகழ்வின் நிழல்

(குறிப்பு பக்கம் - 39)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2009ஆம் ஆண்டுச் சிறந்த மாணவி செல்வி செல்வலக்சுமி செல்வராஜன் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களிடம் இருந்து பொன்விருதைப் பெறுகின்றார் (குறிப்பு - பக்கம் 39)

மலிவு விற்பனையின் நிகழ்வின் நிழல்கள் (குறிப்பு பக்கம் -39)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org